தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 16, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு 2025

1994 மார்ச் 30, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்'.

தக்க அறிவுடையோர் கூட்டத்தை உடையவராய், தானும் அறிவோடு ஒழுக வல்லவர்க்குப் பகைவர்கள் செய்யக்கூடிய துன்பம் ஏதொன்றுமில்லை.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 141, திரு. வி. கே. சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 142, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், திரு. சண்முகநாதனும் இருக்கையில் இல்லை.

வினா எண் 143, டாக்டர் ஜி. ஆர். மாலா, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் ச. ஆரோக்கியசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

143—

திருச்சிராப்பள்ளி மண்டலப் போக்குவரத்து அலுவலகத்தை இடமாற்றம் செய்தல்.

*13836—டாக்டர் ஜி. ஆர். மாலா :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மண்டலப் போக்குவரத்து அலுவலகத்தை (R.T.O's, Office) திருச்சி ஜங்ஷன், மன்னார்புரம் என்ற இடத்திலிருந்து மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருச்சி ஜங்ஷன், மன்னார்புரம் என்ற இடத்திலுள்ள வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்ற திருச்சிராப்பள்ளி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு, திருச்சிராப்பள்ளி தாலுக்கா கோட்டப்பள்ளி கிராமத்தில் ரூ. 19.50 இலட்சம் செலவில் சொந்தமாகக்கட்டிடம் கட்டுவதற்காக 1994-95-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்படும்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திருச்சிராப்பள்ளி நகரத்தை மாநகராட்சியாக்க அறிவித்துள்ளார்கள். இந்த நேரத்தில் எங்களுடைய திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அமைந்துள்ள அதுவும் திருச்சிராப்பள்ளி நகரத்தில் அமைந்துள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகமானது மிகுந்த பற்றாக்குறை உள்ள இடத்தில் அமைந்திருக்கிறது. இன்றைக்கு பெருகி வரும் வாகனங்களுக்கு ஒப்ப அந்த அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து திருச்சிராப்பள்ளி நகரத்தில் ஒரு அலுவலகத்திற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதற்கு ஏறத்தாழ 5 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆக வருகின்ற பகுதி—2 திட்டத்தில் இதற்கான ரூ. 19.50 இலட்சம் செலவிலே புதிய கட்டிடத்தை அங்கே கட்டுவதற்காக நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை இரண்டாகப் பிரிக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ஆர்.டி.ஓ.—வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அந்த நகரத்தை விட்டு 1 கிலோ மீட்டர் தள்ளி இருப்பதுதான் சாத்தியக்கூறாக இருக்கும். காரணம், குறைந்த விலையில் நிலங்களை நாம் ஆர்ஜிதம் செய்வதற்கு வாய்ப்பு இருக்கும். நகரத்தின் மத்தியிலே 5 ஏக்கர் நிலம் எடுக்க வேண்டுமென்று சொன்னால் ஏறத்தாழ ரூ. 5 கோடி தேவைப்படுகிறது. ஆகவே அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இடையில் வந்தவர் தான், ஒரு துணைக் கேள்விக்கு மேல் கிடையாது.